# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**விசாரணை நாள் 01.07.2026**

**(காணொளி காட்சி விசாரணை)**

**ஆணை நாள் 24.07.2026**

**முன்னிலை**

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 3317/A/2024**

திரு. G. சுப்ரமணியம் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காங்கயம் வட்டம், -- பொது அதிகார அமைப்பு
திருப்பூர் மாவட்டம் - 638 701.

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு.G.சுப்ரமணியம் அவர்கள் ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பு | திரு.மு.சுந்தரமூர்த்தி<br>பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், காங்கயம் வட்டம். திருப்பூர் மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 03.10.2023 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், தமிழ்நாடு அடகு வணிகர் நிறுவனங்கள் சட்டம் 1943-ன் கீழ் எத்தனை நகை அடகு கடைகளின் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன என்ற தகவல் மற்றும் குற்றவியல் நடவடிக்கை முடிவுக்கு வந்திருந்தால் தண்டனை உத்தரவுகள் ஆகியவற்றை தனக்கு தகவலாக வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார். | |

| | |
|---|---|
| சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனு மாற்றம் செய்த நாள் | 02.11.2023 |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | ----- |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 03.11.2023 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | ----- |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 12.03.2024 |

2. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத்தகவல் அலுவலர், திரு.மு.சுந்தரமூர்த்தி, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், காங்கயம் வட்டம். திருப்பூர் அவர்கள் மனுதாரருக்கு ப.மு.2705/2023/ஆ3, 02.11.2023 மற்றும் ப.மு.2705/2023/ஆ3, 02.11.2023 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத்தகவல் அலுவலராலும், ப.மு.2610/2024/ஆ3, 25.09.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என ஆணையத்தில் தெரிவித்து அவற்றின் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், அடகுக்கடை நிறுவனங்கள் தனது உரிமத்தை உரிய காலத்தில் புதுப்பிப்பது இல்லை என்றும் காலம் தவறியே தங்களது உரிமத்தை புதுப்பிப்பதாகவும் தெரிவித்தார். மேலும், இது தொடர்பான கோப்புகள் உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருப்பதாகவும், அவற்றின் மீது குற்றவியல் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துவிட்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தெரிவித்து, பொதுத்தகவல் அலுவலரிடமிருந்து உரிய தகவல் பெற்று வழங்கவும், ஆணையிடுமாறு கோரினார்.

4, இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், பொதுத் தகவல் அலுவலரால் உரிய தகவல்கள் அளிக்கப்படவில்லை என ஆணையம் கருதுகிறது. மனுதாரர் 75 வயது மதிக்கத்தக்க முதியவர், அவர் 13 அடகு நிறுவனங்கள் பற்றிய தகவல்களை தனக்கு வழங்கக் கோரி 03.10.2023 அன்று விண்ணப்பித்துள்ளார். அதற்கு, பொதுத்தகவல் அலுவலர் 02.11.2023 மற்றும் 16.11.2023 நாளிட்ட கடிதங்களின் வாயிலாக தகவல் அளித்திருப்பதாக தெரிவித்துள்ளார். ஆனால் அக்கடிதங்களில் அளிக்கப்பட்ட தகவல் முழுமையற்ற தகவலாகவும், மனுதாரருக்கு உண்மையான தகவல்களை அளிக்கக்கூடாது என்னும் நோக்கத்தோடு அளிக்கப்பட்ட தகவலாகவும் இருப்பதாகவே ஆணையம் கருதுகிறது. மனுதாரர் 75 வயதான ஒரு மூத்த இந்திய குடிமகன் ஆவார். தகவல் அறியும் உரிமை சட்டம் அனுமதித்திருக்கும், 30 நாட்களுக்குள் அளிக்க வேண்டிய தகவலை 3 ஆண்டுகள் அலைக்கழிப்பிற்கு பிறகும், முழுமையற்ற தகவலாகக் கொடுத்தும், உண்மையான தகவலை அளிக்காமலும், திசை திருப்பும் நோக்கிலும் செயல்பட்ட பொதுத்தகவல் அலுவலருக்கு ஆணையம் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

5. இந்தியா, நடுத்தர மக்கள் வாழும் வளரும் நாடாகும். பெரும்பாலான மக்கள் விவசாயத் துறையை நம்பி இருக்கக்கூடிய நாடாகும். இப்படிப்பட்ட நாட்டில் அன்றாட பொருளாதார அத்தியாவசியத் தேவைகளுக்கு, இன்றைய காலங்களில், ஒரு நபர் வங்கிகளில் இருக்கும் தன்னுடைய பணத்தை எப்போது வேண்டுமானாலும், ATM-ல் எடுத்துக்கொள்ளலாம். தன்னுடைய பணத்தை மட்டுமே எடுத்துக்கொள்ள இயலும். பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் அவசரத் தேவைக்கு, அடகுக் கடைகளே மக்களுக்கு பெரிதும் உதவி வருகிறது என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. இருந்தாலும், பலகோடி மக்களின் அவசர பொருளாதார

தேவைகளை நிவர்த்தி செய்யக்கூடிய இந்த அடகுக்கடைகள் அரசின் சட்டதிட்ட விதிகளுக்கு உட்பட்டு, உரிமம் பெற்று செயல்படுகிறதா என்பதை சமூகத்தில் பலர் கவனிக்கத் தவறினாலும், மனுதாரர், 75 வயது முதியவர், அரசாங்க பணி செய்து ஓய்வு பெற்றவர், சமூக நலனோடு, பொதுநல நோக்கோடு 13 அடகுக் கடைகள் பற்றி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு அரசாங்கத்தின் உரிமம் பெறப்பட்டுள்ளதா? உரிமம் உரிய காலத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளதா? குற்ற வழக்குகள் ஏதும் நிலுவையில் உள்ளதா? என்று சமூக அக்கறையோடு, தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் தகவல் கேட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய வகையிலும் செயல்படுவது பாராட்டுக்குரிய ஒன்றாகும். இவ்வழக்கில், பொதுத்தகவல் அலுவலர், மனுதாரருக்கு தகவலை வழங்க வேண்டுமென்ற முழுமையான எண்ணத்தோடு அல்லாமல், பெயரளவில் ஒரு முழுமையற்ற தகவலை அளித்திருப்பது ஏற்புடையதல்ல என்று இவ்வாணையம் கருதுகிறது.

6. இவ்வழக்கில் மனுதாரர் லட்சக்கணக்கான பொதுமக்கள் பயன்பெறும் வகையில், பொதுநலன் கருதியே இத்தகவலை கோரியுள்ளார். இவ்வழக்கில் உரியகாலத்திற்குள் தகவல் அளித்திருந்தால் மனுதாரருக்கு மனஉளைச்சலும், அலைக்கழிப்பும் இருக்க வேண்டிய தேவை இருந்திருக்காது. எனவே, உரிய காலத்தில் தகவல் வழங்காத பொது அதிகார அமைப்பானது மனுதாரருக்கு ரூ5,000/- இழப்பீடு வழங்கவும் உத்தரவிடுகிறது. மேலும், பொதுத்தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து இவ்வாணையம் பின்வருமாறு உத்தரவிடுகிறது :-

- ***மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு உரிய காலத்திற்குள் தகவல் அளிக்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திருமதி.உஷாராணி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், காங்கயம் வட்டம். திருப்பூர் மாவட்டம் அவர்களின் மீது தகவல் அறியும் உரிமை சட்டம், 2005, பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை 29.07.2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது. அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களுக்கு இக்கடிதத்தினை சார்வு செய்ய தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களுக்கு இவ்வாணையத்தால் உத்தரவிடப்படுகிறது.***

- ***தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காததால் மனுதாரருக்கு ஏற்படுத்தப்பட்ட தேவையற்ற தொந்தரவு மற்றும் தேவையற்ற சிரமத்தினால் (***Harrasment or Unnecessary inconvenience caused) ***மனுதாரருக்கு ஏற்பட்ட மனஉளைச்சல் மற்றும் உடல் பாதிப்பினால் தன்னுடைய குடும்பம் மற்றும் தனது வருமானம் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தாலும், மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள இழப்பினை ஈடுசெய்யும்பொருட்டு பொது அதிகார அமைப்பு மீது நடவடிக்கை மேற்கொள்ளவும். உரிய நஷ்டஈடு வழங்க வேண்டியும் ஆணையத்தின் விசாரணையில் தெரிவித்ததன் அடிப்படையில் மனுதாரரின் கோரிக்கையினை ஆணையம் ஏற்று, மேற்படி தகவல்கள் வழங்காததால் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள மனஉளைச்சலை ஈடுசெய்யும் பொருட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல் வழங்காத பொது அதிகார அமைப்பு தகவல் அறியும் உரிமைச் சட்டம்*** 2005, ***சட்டப்பிரிவு*** 19(8)(b)-***ன் கீழ் மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)***

*வழங்கவும். மனுதாரர் தொகையினை மேற்படி பெற்றுக்கொண்டதற்கான ஆதாரத்துடன் கூடிய அறிக்கையின் நகலினை இவ்வாணையத்திற்கு 29.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*

- *மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள தகவல்களுக்குரிய முழுமையான தகவல்களை "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் தகவல்களை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சலக இணையதள ஒப்புகை சீட்டின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 29.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகின்றது.*

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 3317/A/2024**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காங்கயம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம் - 638 701.

**மனுதாரர்**

திரு. G. சுப்ரமணியம்
சாஸ்தா இல்லம்,
1/72, ஜூபிலி கிணறு வீதி,
பொள்ளாச்சி,
கோயம்புத்தூர் - 642 001.

Copy to file

KRM/PA 06.07.2026